# கிறிஸ்து பிறப்பு சிறப்பிதழ்






# cd;NdhL xU thuk;

## [நற்சிந்தனை]



அருட் தந். P. ரமேஷ் கிறிஸ்ரி

**இறை இரக்க வெளியீடு திருகோணமலை**

மலர் –01 இதழ் – 03

(காணிக்கை -10/=)

இணையத்தளம் www.divinemercyshrine.org

30.11.2008 — *வாரம் - 01*— 06.12.2008

# விழிப்போடு காத்திரு

**நற்செய்தி - மாற் 13:33, - 37**

**பிரியமானவர்களே,**

திருவருகை காலத்தின் முதல் வாரமாகிய இன்றைய நாளில் தேவன் (மத் 24:42) (லூக் 21 : 36) ல் தரும் அழைப்பு விழிப்பாயிருங்கள் விழிப்பாயிருக்க நாம் (மாற் 13: 33–37) என்ன செய்ய வேண்டும் தூக்கம் தவிர்க்க வேண்டும். ஏனெனில் ,

போர்ப் படைதனில் தூங்கியவன் வெற்றி இழந்தான்
உயர் பள்ளிதனில் தூங்கியவன் கல்வி இழந்தான்
கடைதனில் தூங்கியவன் முதல் இழந்தான் – கொண்ட
கடமையில் தூங்கியவன் புகழ் இழந்தான்

ஆமாம் எனக்கருமையானவர்களே!
விழித்திருத்தல் என்பது தூக்கம் அற்ற நிலை. அப்படியானால் தூக்கம் கொள்வது தப்பான காரியமா?
கிடையாது ! கிடையவே கிடையாது. ஏனெனில்

தூக்கம் என்பது
தூக்கணாங் குருவிக் கூடு

யாரும் கலைக்கலாம்
எவரும் கட்டிவிட முடியாது.

மனிதன் கொடுத்து வைத்தவன்
ஜீவராசிகளில்
மல்லாந்து படுப்பவன்
மனிதன் மட்டும்தான்

தூங்குவது
சுலபமில்லை

காற்று எப்போதேனும்
கண்ணயர்ந்ததுண்டா?

கடலுக்கு யார்
படுக்கை தயாரிப்பது?
சூரியனுக்கு யார்
தூக்க மாத்திரை கொடுப்பது?

தாவரங்கள்
உறங்குவதே இல்லை

விலங்குகள்.
தூக்கத்தின் ஆழம்
தொடுவதில்லை

மனிதனால் காசு கொடுக்காமல்
வாங்கக் கூடியது
கண்ணுறக்கம் மட்டும்தான்.

இப்படியாக நிம்மதி கொடுக்கும் தூக்கத்தை எந்த மனிதனும் இழக்க விரும்புவதில்லை. தூங்காத மனிதனால் உயிர்வாழ முடியாது காரணம் தூக்கம் என்பது உடலுக்கும் மனதுக்கும் கொடுக்கப்படும் ஓய்வு. ஓய்வில்லாமல் இயங்கும் எந்தவொரு மனிதனாலும் அதிக நாட்கள் உயிர்வாழ முடியாது என்பது விஞ்ஞான கண்டுபிடிப்பு.

அப்படியானால் பின் எதற்காக தூக்கம் கலைந்து விழித்திருக்க நாம் அழைக்கப்படுகிறோம்?

தூங்க வேண்டி நேரத்தில் விழித்திருப்பதும், விழித்திருக்க வேண்டிய வேளையில் தூங்கவும் வேண்டாம். என்பது தான் தேவனின் போதனை

எவ்வளவுதான் வேகமுடைய ஓட்டக்காரனாக இருந்தும் கூட போட்டி நேரத்தில் தூங்கியதால் தான் முயல் ஆமையிடம் தோற்றது.

மனுமகன் இரவில் வந்த போது 5 கன்னியர்கள் அவரைத் தவற விட்டது எதனால்? (மத் 25:5) சொல்கிறது அவர்களிடம் விழிப்பில்லை என்று.

தன் கடமைகளில் விழிப்பாயிருக்கும் காவலரே வெற்றி பெறுவார்.

❖ பூமி உருண்டை என்று கண்டறிந்த கலிலியோ ஒரு நாளில் தூங்கியது வெறும் 1.30 மணி நேரம் தான்.

❖ அகில உலகையும் தன்னகத்தே கொண்டுவர வேண்டும் என்று துடித்த மகா அலெக்ஸாண்டர் ஒரு நாளில் தூங்கியது ஒரே மணி நேரம் தான்

❖ மின்சார விளக்கைக் கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன் அந்த நாட்களில் தூங்கியது வெறும் அரை மணி நேரம்தான்

சிந்தித்துப்பாருங்கள் தேவனை சந்திக்க நாம் ஜெபத்தோடு விழித்திருக்கின்ற நேரம் எவ்வளவு?

இத்தனை நாட்களும் நாம் ஞான வாழ்க்கையில் தூங்கிக் கொண்டிருந்திருக்கலாம் ஆனால் இனியும் இந்தத் தூக்கத்தைக் கலைத்திடுவோம் ஏனெனில் இவை இறுதி நாட்கள். (உரோ 13:11)

பூமிக்கு இன்று தான்
கடைசிப் பகல்
இனி இந்த பூமி
சூரியனின் கல்லறை
பூமியரங்கில்
யுகம் யுகமாய்
ஓடிக்கொண்டிருந்த பகல் காட்சி
இன்று தான் கடைசி
நாளை முதல்
கிழக்கு திலமிழக்கும்
திசைகள்
பதவியிழக்கும்

பூமிக்கு இனிமேல்
வருடங்கள் இல்லை

பூமிக்கு இனிமேல்
பருவங்கள் இல்லை

இருளின் மடியில் உலகம்
உலகின் மடியில் இருள்

என்ன வேடிக்கையாக இருக்கிறதா இல்லை ப்ரியமானவர்களே இதுதான் உண்மை காரணம் இவை இறுதி நாட்கள்.

தன் அடி வயிற்று
நெருப்பு அணைந்துவிட்டால்
இந்த பூமி இறந்துவிடும்
பூமியைப் புதைக்க
அவ்வளவு பெரிய
கல்லறைக்கு எங்கு போவது
என்று கவலையாக உள்ளதா
கலங்க வேண்டாம்

இந்த பூமி மரிக்காது
மரிக்கவும் கூடாது
மனித ராசி
மாண்டுவிடக் கூடாது
ஒவ்வொரு நட்சத்திரமும்
பல மடங்கு சூரியனாமே
மனிதா இந்த பூமியை
ஒரு நட்சத்திரத்தை நோக்கி நகர்த்து.

எந்த நட்சத்திரத்தை என்று குழப்பமாக இருக்கிறதா? குழம்ப வேண்டாம் இனி மேல் நீங்கள் எந்த நட்சத்திரத்தையும் நோக்கி அலையத் தேவையில்லை இன்னும் சில காலங்களில் உங்களையே தேடி அழியா நட்சத்திரம் ஒன்று வரவிருக்கிறது. அது இந்த பூமிக்கு புத்துயிர் கொடுக்கும் அந்த நட்சத்திரம் தான் இயேசு என்கிறது இன்று நாம் படித்த வேதம்.

ஏனெனில் கொடூரமான அழிவுகள் ஏற்படும் போது கலங்காதீர்கள் அது கர்த்தராகிய தேவனுடைய வருகையின் அடையாளம் என்ற (லூக். 21:28) சொல்கிறதை இப்போது நினைவில் வைக்க வேண்டும்.

ஆகவேதான் விழித்திருந்து நம்மைத் தன் வருகைக்காகக் காத்திருக்க தேவன் அழைக்கிறார்.

தேவன் எப்போது வருவார்?

அவர் வரப்போகிறார் என்பது தெளிவாக இருந்தாலும் எப்போதும் வருவார் என்பது யாருக்குமே தெரியாது அது பரம பிதாவைத் தவிர வேறு எவருக்குமே ஏன் இயேசுவுக்கே தெரியாது என்று (மத். 24:36) சொல்கிறது.

பரீட்சை வரும் என்பது மாணவனுக்குத் தெரிந்தாலும் அதில் என்ன கேள்விகள் கேட்கப்படும் என்பது மாணவனுக்கே தெரியாது தெரிந்தால் அதற்காக குறிப்பிட்ட கேள்விகளையும், விடைகளையும் மாத்திரமே ஆயத்தம் பண்ணுவான் முழுபாடத்திலும் அவன் தேர்ச்சி பெறமாட்டான்.

குறிப்பிட்ட சில பாடங்களைத் தவிர வேறு பாடங்களைக் குறித்து அவன் கவனிக்கவே மாட்டான் அவை அவனது வாழ்நாள் பூராகவும் விடுபட்டதாகவே போய்விடும். அவனால் முழுமனிதனாக ஆக முடியாது.

ஆமாம் அருமையானவர்களே!
அவனால் முழுமனிதனாக ஆக முடியாது.

ஒவ்வொரு மனுஷனும் முழுமை அடைய வேண்டும் என்பதே தேவ சித்தம் முழுமை என்பது பாவங்களுக்காக மனம் வருந்தி தூய்மையாகும் நிலை. ஆதாமும் ஏவாளும் படைக்கப்பட்ட ஆரம்ப நிலை அது. அவர்கள் தூய உள்ளத்துடன் இருந்ததினால் தான் தேவனை முகம் முகமாக கண்டனர்.

எனவே தேவனுடைய வருகையை நோக்கிக் காத்திருக்கும் தேவ ஜனமாகிய நாமும் அவர் வருகின்ற போது முகம் முகமாக தரிசித்து அவருடன் ஐக்கியமாக வேண்டுமானால் தூய்மை உள்ளம் கொண்டு வாழ வேண்டும்.

காரணம் என்னவெனில் இயேசுவே (மத்5:8)ல் சொல்லியிருக்கிறார் தூய உள்ளத்தோரே பேறு பெற்றோர் ஏனெனில் அவர்களால் மாத்திரமே கர்த்தரைத் தரிசிக்க முடியும் என்று.

எனக்கருமையானவர்களே !
வரவிருக்கும் நம் மெசியாவைத் தரிசிப்பதற்கு நம்மை ஆயத்தமாக்க வேண்டியது நம் கடமை அதற்கு கிறிஸ்தவர்களாகிய நாம் நான்கு காரியங்கள் செய்ய வேண்டும்.

1. முதலில் நம் தீச்செயலுக்காக மனந்திரும்ப வேண்டும்
2. மனந்திரும்பும் போது உள்ளம் தூய்மையாக்கப்படும்
3. மூன்றாவதாக தூய்ம்மயாக்கப்படும் உள்ளம் விழித்திருக்க வேண்டும்
4. இறுதியாக ஜெபிக்க வேண்டும்

மெசியாவை சந்திக்க இந்த 4 காரியங்களும் அவசியமானது. நன்றாக கவனித்துப் பார்த்தால் இவை 4 காரியங்களுமே நம்முடைய உள்ளம் சார்ந்ததாக காணப்படுகின்றது.

தேவனை முகம் முகமாக நோக்கிப் பார்ப்பதற்கு நமக்குத் தடையானது நம்முடைய உள்ளம்தான்

- தேவனை சந்திக்க சக்கேயுவுக்குத் தடையாக இருந்தது அவன் குள்ளமல்ல மாறாக உள்ளம்.
- திரும்பி வந்த மகனை மன்னிக்க நினைத்தது தந்தையின் உள்ளம் என்றால் தண்டிக்கச் சொன்னது அண்ணனின் உள்ளம்.
- மகன் பிறப்பான் என்ற செய்தி மரியாவுக்கு நம்பிக்கையையும் சக்கரியாவுக்கு சந்தேகத்தையும் தந்தது ஒரு உள்ளம் நம்பியது மற்றையது நம்பத் தயங்கியது.

மொத்தத்தில் இத்தனை வேத நிகழ்வுகளும் விளக்கிச் சொல்வது வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் நம்மை நேர்த்தியாக செல்ல வைப்பதும் நிலை குலைய வைப்பதும் அவரவரின் உள்ளமே.

இந்த உள்ளம் தேவனுடைய வருகைக்காக எந்தளவுக்கு விழிப்பாக உள்ளது என்பது தான் இன்றைய கேள்வி இதற்கான தகுந்த பதிலை தரவேண்டுமானால் எம் வாழ்க்கையில் ஒரு மாற்றம் வேண்டும் அது நம் பாவ வாழ்க்கையில் இருந்து நம்மைப் புனிதம் சேர்ப்பதற்கு உறுதியளிக்கும்.

எனவே மாறிடுவோம் புதியவர்களாக. தூய உள்ளத்துடன் நாம் இருந்து தேவனின் வருகையின் போது அவரை முகம் முகமாகக் கண்டிடுவோம்.

**ஆமென்.**

**07.12.2008 — *வாரம் - 02*— 13.12.2008**

## ஆயத்தமாகுவோம் ஆயத்தமாக்குவோம்

**நற்செய்தி - மாற் 1:1 - 8**

பல் முளைக்கையில்
ஈறுவலிக்கும்

மாற்றம் முளைக்கையில்
வாழ்க்கை வலிக்கும்

வலியெடுத்தால் வழி பிறக்கும்
இயேசு
ஒளி உதித்தால்
உலகம் செழிக்கும்

கர்த்தருக்குள் ப்ரியமானவர்களே!

எண்ணம் தான் வாழ்க்கை என்பர் சிலர்
நம்பிக்கைதான் வாழ்க்கை என்பர் சிலர்
அனுபவம்தான் வாழ்க்கை என்பர் இன்னும் சிலர்
ஆனால்

வாழ்க்கை என்றால் என்ன என்பதனை முழுமையாகப் புரியவேண்டுமா?
இதோ உங்களுக்கான பதில்.
வாழ்க்கை
ஒரு மலர்
திறந்தால் புத்தகம்!
உதிர்ந்தால் தத்துவம்!

உதிர்ந்த மலராய் கல்லறைத் தோட்டத்தில் காட்சியளித்த கணக்கிலடங்காத கல்லறைகள் கற்பிக்கும் வாழ்க்கைத் தத்துவங்கள் இலட்சம்.

எல்லாக் கல்லறையிலும் ஒரே தத்துவம் ஒவ்வொரு கோணத்தில் எழுதப்பட்டிருந்தது.

அதுதான் அவரவர் பிறந்த ஆண்டு மாதம் தேதி
அதில்தான் வாழ்க்கைத் தத்துவம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

கல்லறையில் பொறிக்கப்பட்டிருக்கும் பிறப்புத் திகதிக்கும் இறப்புத் திகதிக்கும் இடையிலே போடப்பட்ட சிறிய கோடு அதுதான் வாழ்க்கை.

இதனால் தான் எவனோ ஒருவன் சொல்லி வைத்தான்!

பிறப்பு எனும் கரைக்கும்
இறப்பு எனும் கரைக்கும்
இடையில் ஓடும் நதிதான்
இவ்வுலக வாழ்க்கை

ஆமாம் அருமையானவர்களே!
அந்த வாழ்க்கை எப்பேற்பட்டது தெரியுமா?

அது
பெட்டி படுக்கைகளைச்
சுமந்தபடி
ஒரு பிரயாணம்!

எப்போது சுமைகளை
இறக்கி வைக்கிறோமோ
அப்போது
சுற்றியிருப்பவர்கள்
நம்மைச்
சுமக்கத் தொடங்குகிறார்கள்.

இப்படிப்பட்ட வாழ்க்கையில் கோடிட்டுக் காட்டப்பட்ட சின்ன இடைவெளிக்குள் முடங்கித் தவிக்கும் மனிதனுக்கு

இன்று கர்த்தர் விடுக்கும் அற்புதச் செய்தி இது!

மனிதா நீ
எனக்காக எழுதப்பட்ட
கடிதம்!
இன்னும் ஏன்
வந்து சேரவில்லை?

தபாற்காரர்கள் உன்னைத்
தாமதப் படுத்துகிறர்களோ?
எவருடைய கையில்
இருக்கிறாய் இப்போது
எந்த பாவ மாயைக்குள்
பரிதவிக்கிறாய்?

ஒன்றை
மறந்து விடாதே
மனிதா!
நீ
எனக்காக எழுதப்பட்ட
கடிதம்!
இன்னும் என்னிடம்
வந்து சேரவில்லை

எனவே நீ என்னிடம் வந்து சேர வேண்டும் இதோ அதற்காக நான் உன்னிடம் வரவிருக்கிறேன் என்னை தரிசிக்க நீ தயாரா?

இல்லையென்றால் இன்றைய நற்செய்தியில் அருளப்பன் தரும் அறைகூவலைக் கவனி!

உனக்குத் தெரியாத ஒன்றையும் அவர் புதிதாக சொல்லி விடவில்லை நீ தினமும் கேட்டுக் கேட்டு உன் உள்ளத்துள் உறைந்து போன அதே அறிவுரைதான்.

உன் இதயக் கோப்பை பாவத்தால் நிறைந்திருந்தால் முதலில் அதனை காலி பண்ணிவிடு

அதன் பிறகு உனக்குள் நான் வாசம் பண்ண வருகிறேன்.

அதற்காகத்தான் அருளப்பன் (மாற்.1:4)ல் உனக்கு விடுக்கும் அருமையான அறைகூவல் மனம் மாறிவிடு.

ஆகவே பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே உள்ள கோடாக உன் வாழ்க்கை. வாழும் நாட்கள் அதிகம் அல்ல எப்போது வேண்டுமானாலும் அது முடிவடையலாம். அதற்குள் மனம்மாறினால் கர்த்தரின் வருகை உனக்கு சமீபமாகும்.

ஏனெனில் (திவெ. 3:20) சொல்கிறது அவர் வந்துவிட்டார் ஆனால் நம் உள்ளத்துள் வராமல் இதோ, கர்த்தராகிய தேவன் நம் இதயக் கதவண்டை நின்று தட்டிக் கொண்டிருக்கிறார்.

அதற்கு என்ன காரணம்?

நம்முடைய வீடு குப்பையாகக் கிடக்கிறது உள்ளே வரும் விருந்தாளி சுத்தத்தை எப்போதும் நேசிப்பவராக இருந்தால் அவர் அன்று மாத்திரமல்ல என்றுமே வரமாட்டார்.
நம் இதயக்கதவண்டை வந்துள்ள இயேசுவும் தூய உள்ளத்தையே நேசிப்பவர் ஆகவே அவரை உள்ளே ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் நாமும் தூய உள்ளத்தினராய் மாறவேண்டும்.

ஏனெனில் (நீமொ. 22:11) சொல்லுகிறது ஆண்டவர் விரும்புவது தூய உள்ளத்தினரையே அப்படி வாழுகின்றவர்கள் மாத்திரமே கர்த்தரைக் கண்கூடாகக் கண்டு கொள்ளும் பாக்கியம் பெற்றவர்கள் என்று இயேசு ஆண்டவரே (மத்.5:8) திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

எனவே நாமும் தூய உள்ளத்தினராய் வாழ என்ன பண்ணமுடியும்?

அதற்குத் தடையாக இருக்கும் பாவத்தை இழக்க வேண்டும். நீ இழக்கத் தயாராகாதவரை எத்தனை கிறிஸ்மஸ் வந்தாலும் கிறிஸ்து உன்னிடம் வரப்போவதில்லை. எனவே

மனிதா !
இன்று முதல்
உன் பாவங்களைத்
தூக்கித் திரியாதே
அவை ஒன்றும்
பால் குடிமறவாத
குழந்தைகள் அல்ல

நம்முடைய பாவங்கள் நமக்குப் ப்ரியமானவைகளாக இருக்கலாம் ஆனால் அதையும் விட இயேசு நம்மை அதிகமாகவே நேசிக்கிறார்.

நாம் நேசிப்பவரைவிட நம்மை நேசிப்பவரை நேசித்தால் நம் வாழ்வு வளமடையுமல்லவா? அதற்காக நாம் செய்ய வேண்டியது! இத்தனை நாட்களாக நம்மோடு ஒட்டி

உறவாடிக்கொண்டிருந்த நமக்குப் ப்ரியமான பாவங்கள் அதனை இழக்க வேண்டும்.

ஒன்றில் ப்ரியம் வைக்கும் போது அதை பிரிந்து விடுவதென்பது இலகுவான காரியம் கிடையாது ஆனால் அதை இழக்காத சந்தர்ப்பத்தில் அதுவே நம் வாழ்க்கைக்கு வினையாகிவிடும் என்றால் என்ன செய்வது ?

எல்லாருமே தங்களுடைய பற்களை பிரியத்துடன் பேணி வளர்க்கத்தான் ஆசைப்படுவர் ஆனால் அவற்றுள் ஒன்று கிருமியினால் பாதிக்கப்படும் போது உடனடியாக அதைப் பிடுங்கிவிட வேண்டும். வலிக்குமே என்று பர்த்தால் வாழ்வில் மாற்றங் காண்பது கடினம். கர்ப்ப வேதனையை அனுபவிக்காத அன்னையால் குழந்தையைப் பெற்றெடுக்க முடியாது.

புதுமை பிறக்கும் போது வலி இருக்கத்தான் செய்யும் அதைப் பொறுமையோடு பொறுத்துக் கொள்ளும் போதுதான் வாழ்வில் வெற்றி கிடைக்கிறது.

பல் முளைக்கையில்
ஈறுவலிக்கும்

மாற்றம் முளைக்கையில்
வாழ்க்கை வலிக்கும்

வலியெடுத்தால் வழி பிறக்கும்

இதனால்தான் தேவன் தாமே (மத்5:4) துயருறுவோர் பேறுபெற்றோர்:
ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர் என்று அருள்வாய் மொழிந்தருளியிருக்கிறார்.

இதோ அந்த ஆறுதலின் தேவன் நம் அண்டைவர ஆசைப்படுகிறார் நம்முடைய வேதனைகளில் ஆறுதல் தந்து நம் உள்ளத்தில் அமைதி பொழிய வரவிருக்கிறார்.

அவர் தரப்போகும் அமைதி எப்படிப்பட்டது தெரியுமா?
(எரே.14.13)ல் தேவனுடைய ஊழியக்காரனான எரேமியா சொல்லுகிறான் தேவன் நம்மிடையே குடிகொள்ளும் போது

புத்தம் புது பூமி தோன்றும்
யுத்தம் இல்லாத பூமி
வெடி சத்தமில்லாமல் மாறும்

பஞ்சமும் பசியும்
கொஞ்சமும் இல்லாமல்
கொஞ்சிக்குலவும்
சின்னஞ்சிறு குழந்தையாய்
சிங்கத்தின் மடியில் செல்லக்கிளிகள் இளைப்பாற
நிலையான அமைதி உண்டாகும்.

ஆனாலும் அதற்கு முந்தினதாக வேதம் சொல்கிறது இந்த பூ கோளத்தில் மாபெரும் அழிவுகள் ஏற்படும்.

நாடு நாட்டை விழுங்கும், இனம் இனத்தை அழிக்கும், பஞ்சம் பசி அநியாயம் அட்டூழியங்கள் அதிகரித்துக் காணப்படும் அப்படியெல்லாம் நிகழும் போது தேவன் சொல்லுகிறார். கலக்கமடைய வேண்டாம் இவையெல்லாம் என்னுடைய இரண்டாம் வருகைக்கான முன் அடையாளங்கள்.

எனவே ப்ரியமானவர்களே!
இன்று நம்முடைய தேசத்திலும் சரி ஒட்டு மொத்த லோகத்திலும் சரி இவை அத்தனையும் கட்டுக் கட்டாய் நடந்து கொண்டுதானே இருக்கின்றன. அப்படியானால் (திவெ.3.20) சொல்லுவதன்படி மெய்யாகவே தேவன் நம் கதவண்டை வந்து தான் நிற்கிறார்.

எனவே அவரை உள்ளே ஏற்றுக்கொள்ள நம் உள்ளத்தே ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகுவோம்

தேவனுடைய தூதன் வந்த போது இஸ்ரவேலின் குமாரர்கள் யாருமே அழிந்து போகாதபடி அவர்கள் தங்களின் இல்லத்தை முத்திரையிட்டு ஆயத்தமாக இருந்தார்கள்.

வெள்ளப் பெருக்கு வந்த போது ஆயத்தமாக இருந்த நோவாவும் அவனுடைய ஜனமுமே ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டது.

தந்தைக்குரித்தான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆயத்தத்தோடு இருந்த யாக்கோப்புத்தான் இஸ்ரவேலாக ஆசீர்வதிக்கப்பட்டார்.

சிங்கத்தின் குகைக்குள் போடப்பட்ட போது ஆத்தும ஆயத்தம் பண்ணியிருந்த தானியேல் தப்புவிக்கப்பட்டார்.

கர்த்தருக்காக என்னையே தரத்தயார் என்று வாழ்ந்ததினால்தான் கன்னிமரி கர்த்தரின் தாயாராகும் பாக்கியவதி ஆனாள்

இவர்கள் வரிசையில் நாமும் கர்த்தருக்காக காத்திருப்போம்! என்ன நேர்ந்தாலும் நிலைகுலைய மாட்டேன் இயேசு கிறிஸ்து என்னோடு என்ற நம்பிக்கையோடு வாழ ஆரம்பிப்போம் அப்போது கர்த்தரின் வருகை இன்னும் நமக்கு சமீபமாகி விடுவதோடு பல ஆசீர்வாதங்களையும் நமக்குப் பெற்றுக் கொடுக்கும் ஆகவே அதற்காக

மனிதனே!
போர்களை நிறுத்து
புன்னகை உடுத்து

பூமியை நேசி
பூக்களை ரசி

மனிதரை மதி
மண்ணவன் இயேசுவைத் துதி
இன்றிலிருந்தாவது

**ஆமென்.**

**14.12.2008 — *வாரம் - 03*— 20.12.2008**

# அவரை ஏற்றுக்கொள்வோம்

**நற்செய்தி - யோ 1:6-8, 19-28**

கிளிக்கு இறக்கை இருக்கும் வரைக்கும்
கிழக்கு வானம் தூரமில்லை
முளைக்கும் விதைகள் முளைக்கத் துடித்தால்
பூமி ஒன்றும் பாரமில்லை
பாவம் விட்டு விலகி விட்டால்
தேவனை ஏற்றுக்கொள்ளத் தடைகள் இல்லை

இன்று பெரும்பாலன

ஆண்கள் பெண்களையும்
பெண்கள் ஆண்களையும்
சிறியவர்கள் பெரியவர்களையும்
பெரியவர்கள் சிறியவர்களையும்
பெற்றோர்கள் பிள்ளைகளையும்
பிள்ளைகள் பெற்றோரையும்
கணவர் மனைவியையும்
மனைவி கணவரையும்
ஏற்றுக்கொள்ளுவது கிடையாது.

இப்படியான சூழ் நிலையில் தன்னைத் தயக்கமின்றி ஏற்றுக்கொள்ளும் படியும் அப்படி ஏற்றுக் கொள்பவனே பேறுபெற்றவன் என்றும் தேவன் வேதத்தில் நமக்கு அழைப்பு விடுக்கின்றார்.

இன்றைய சூழ்நிலையில் எல்லோரும் எல்லோரையும் ஏற்றுக்கொள்வதில்லை. ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ள முடியாமல் போவதற்கு என்ன காரணம்? புரிந்துணர்வு இல்லாமை.

புரிந்துணர்வு எல்லா மனுஷர்களிடமும் காணப்படுவது கிடையாது. எந்த மனுஷனிடம் புரிந்துணர்வு உள்ளதோ அவனே தனக்கு அடுத்திருக்கும் மனுஷனை எல்லா

சூழ்நிலைகளிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியவனாக சமூகத்தில் வாழுகிறான்.

புரிந்துணர்வு உள்ள மனிதரால் மற்றவரை ஏற்றுக்கொள்ள முடியும்.

காரணம் எந்த மனிதனிடம் புரிந்துணர்வு உள்ளதோ அந்த மனிதனே ஆழமாகச் சிந்திக்கக் கூடியவன்.

ஆழமாக சிந்திப்பவனே அடுத்த மனிதனுடைய மனநிலையை அறிந்து செயற்படுகிறான். இப்படியாக தன் சக மனிதனை புரிந்துணர்வுடன் ஏற்றுக்கொள்ளும் மனிதனால் மாத்திரமே இயேசு இன்று விடுக்கும் அழைப்பிற்கேற்ப வாழ முடியும்.

இயேசுவை ஏற்றுக்கொள்ள முதலில் நாம் செய்ய வேண்டியது என்ன? நம் சகோதரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எவன் ஒருவன் தன் சகோதரனை தயக்கமின்றி அவனது குறை நிறைகளுடன் ஏற்றுக் கொள்கிறானோ அவனால் நிச்சயமாக இயேசுவை எந்த தயக்கமின்றி ஏற்றுக்கொள்ள முடியும்.

ஏனெனில் இயேசுவே சொல்லியிருக்கிறார். தன்னை ஏற்றுக்கொள்ளும் எவனும் முதலில் தன் சாயலாகிய மனிதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இதற்கு (மத். 25:40) சாட்சி பகர்கிறது அங்கே நாங்கள் வாசிப்பது என்ன?

மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவரை நீங்கள் ஏற்றுக்கொள்ளும் பொழுது என்னையே ஏற்றுக்கொள்கிறீர்கள் என்பது இயேசுவின் வேதவாக்கு.

அயலவனை மதித்து ஏற்றுக்கொள்பவன் அந்த அயலவனில் ஜீவிக்கும் இயேசுவையே ஏற்றுக் கொள்கிறான் இப்படிப்பட்ட நல்ல உள்ளத்தை இயேசு ஒரு போதும் கைவிடுவதில்லை அதற்கு தகுந்த ஆசீர் தருகிறார் என்று (மத். 10:42) சொல்கிறது.

என்ன அந்த ஆசீர்?

அதற்கான பதிலை (எசா. 35:10) ல் வெளிப்படுத்துகிறார்.

தங்கள் அயலவனை மதித்து வாழுபவர்கள் எப்போதும் சந்தோஷத்துடன் துன்பமின்றி இன்புற்றிருப்பார்கள் என்பதே தேவன் தரும் ஆசீராகும்.

அந்த ஆசீரை பெற்றிடுவோர் அத்தனை பேரும்

உலகுக்குள் கலந்து போவார்கள்
உமக்குள்ளே தொலைந்து போவார்கள்
நிலவுக்குள் மறைந்து போவார்கள்
நேசத்துக்குள் கரைந்து போவார்கள்
மலருக்குள் இறந்து போவார்கள்
மறுபடியும் பிறந்து போவார்கள்
எப்போதும் இன்புற்றிருப்பார்கள்.

ஆகவே எப்போதும் இன்பம் தரும் இப்படியான தேவ ஆசீர் பெறவிரும்பினால் நாம் செய்யவேண்டியது என்ன? நம் சகோதரங்களை அவர்களின் குறை நிறைகளோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் அப்போது தான் இயேசுவின் ஆசிர் நம்மீது பொழியப்படும்.

ஆமாம் பிரியமானவர்களே !
தேவனை ஏற்றுக்கொள்ளும்போது நமக்கு இத்தனை பாக்கியங்களும் கிடைக்கும் என்றால் ஏன் இன்னமும் அவரை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறோம்? அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

தேவனை ஏற்றுக்கொள்ளத் தாமதிப்பதற்கு முக்கிய காரணம் நம்முடைய இதயக் கண்களை மூடியிருக்கும் பாவம் எனும் படலமே. அது நம் அயலவரில் இயேசுவைக் காண நமக்குத் தடையாக உள்ளது.

ப்ரியமானவர்களே !
எப்போது அது நம் கண்களை விடுதலை செய்கிறதோ அப்போதுதான் நம்மால் நம் அயலவரில் தேவனை தெளிவாகக் காணமுடியும் அதற்கு நாம் என்ன செய்யலாம்?

மனக்கண்களை சுத்தம் செய்ய வேண்டும். அதற்கு மற்றவர் மீது நமக்கிருக்கும் எரிச்சல் புகைச்சல் பொறாமை போன்ற தப்பான எண்ணங்களை விட்டுவிட வேண்டும்.

பாவங்களை விட்டுவிடும் போதுதான் இயேசுவை ஏற்றுக்கொள்ளும் மனநிலை உருவாகும். அந்த மனநிலை நமக்கு எப்போது ஏற்படுகிறதோ அப்போது நம் சந்திப்பு இனிமை தரும்

மலர் மணத்தை சந்திப்பதுண்டு

வானம் நிலவைச் சந்திப்பதுண்டு
நிலம் நீரைச் சந்திப்பதுண்டு
கடல் கரையையும்
மயில் மேகத்தையும்
குயில் சோலையையும்
சந்திப்பதுண்டு

இவையாவும் அழகான சந்திப்புக்கள்தான். ஆனால் இவை யாவற்றையும் விட ஓர் அற்புதமான சந்திப்பு ஒன்று நம் நடுவே விரைவில் நிகழ்ப்போகிறது.

விண்ணகம் மண்ணகத்தைச் சந்திக்கப் போகிறது
பாசம் பகையைச் சந்திக்கப்போகிறது
புண்ணியம் பாவத்தைச் சந்திக்கப் போகிறது

ஆம் தேவன் நம்மை சந்திக்க வந்து கொண்டிருக்கிறார்.

அவரை ஏற்றுக்கொள்ள நாம் தயாரா?

கிளிக்கு இறக்கை இருக்கும் வரைக்கும்
கிழக்கு வானம் தூரமில்லை
முளைக்கும் விதைகள் முளைக்கத் துடித்தால்
பூமி ஒன்றும் பாரமில்லை
பாவம் விட்டு விலகி விட்டால்
தேவனை சந்திக்கத் தடைகள் இல்லை.

எனவே தூய உள்ளத்துடன் தேவனை சந்திக்கத் தயாராகிடுவோம்.

**ஆமென்**

21.12.2008 — *வாரம் - 04*— 24.12.2008

# நம்மை சந்திக்க வருகின்றார்

**நற்செய்தி - லூக் -1: 26-38,**

பூமி வெட்கத்தை சந்தித்தது
ரோஜாவைப் பூத்தது

ரோஜா கோபத்தை சந்தித்தது
முட்களை முளைப்பித்தது

முட்கள் யோகத்தைச் சந்தித்தது
இயேசுவின் தலையில் கிரீடமானது

தேவன் சந்தித்தால் நம்
வாழ்வுக்கும் யோகம் உண்டு

தேவனின் சந்திப்பிற்கு இன்று அடிக்கல் நாட்டப்படுகின்றது. நம்மை சந்திக்க தேவன் வரப்போகிறார். வரும் தேவனுக்கு என்ன பெயர். (எசா. 7:14) சொல்கிறது நம்மை சந்திக்க வரும் தேவனது பெயர் இம்மானுவேல்.

எதற்காக தேவன் நம்மை சந்திக்க வரவேண்டும்?

இதற்கான பதிலை (சங் 14:2–3) தருகிறது. தேவன் விண்ணகத்தினின்று மனுஷரை உற்று நோக்குகின்றார். தன்னை நாடுவோர் எவராவது உண்டோ எனப் பார்க்கின்றார். யாருமே தேவனை நினைப்பார் கிடையாது எல்லோரும் ஒருமிக்கக் கெட்டுப்போயினர்: நல்லது செய்வார் யாரும் இல்லை. ஒருவர் கூட இல்லை.

தீமைகள்!
நான்கு திசையும்
எட்டுத்திக்கும் பதினாறு
கோணமும் பரவிக்கொண்டே போனது.
ஆயினும் எவருமே தேவனைத் தேட நினைக்கவே இல்லை.

சூரியனை விட்டு விலகிச் செல்லச் செல்ல நிழலின் நீளம் அதிகமாவது போல தேவனை விட்டு நாம் தூரம் செல்லச் செல்ல நமது பாவங்கள் அதிகமாகும்.

பாவத்தில் அதிகம் அக்கறை காட்டியதால் மனுஷர்கள் தேவனை மறந்தார்கள். இப்படியாக தன்னை மனுஷர்கள் தேடாத போது தேவன் மட்டும் எதற்காக மனுஷனைத் தேட நினைத்தார். சந்திக்க நினைத்தார்?

காரணம் உண்டும்,

தான் படைத்த உலகத்தை தேவன் பார்த்தார்! அழுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்றது. மனிதன் மனிதனை வெறுக்கத் துவங்கினான்.

தனிமரம் தோப்பாகலாம்
தோப்பு தனி மரமாவதைக் கர்த்தராகிய தேவன் கண்டார்.

மிருகம் மனிதனாகலாம் மனிதன் மிருகமாகலாமா?
மனிதன் மிருகமாவதை தேவன் கண்டார்.

சத்துருவாகிய சாத்தானது சூழ்ச்சியால் மனிதர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு சாவதை தேவனால் தாங்க முடியவில்லை.

காயப்பட்டவனோட வலி கத்திக்கு எங்கே தெரியப் போகிறது?

மனிதர்களது உறவு சாத்தானால் காயப்பட்டது அதன் வலி சாத்தானுக்கெங்கே தெரியப்போகிறது?

அந்த வேளையில்தான் காயப்பட்ட மனிதனை தேவன் பார்த்தார் மனிதனது காயங்கள் தேவனது இதயத்துள் வலியை ஏற்படுத்தியது.

ஏனெனில் நானென்ன என் சகோதரனுக்கு காவலாளியா என்ற காயினின் கேள்வி மூலை முடுக்கெல்லாம் எதிரொலித்தது.

எங்கு பார்த்தாலும் கல்லறைத் தோட்டங்கள் பல்கிப் பெருகத் துவங்கின.

நீதிக்கொரு கல்லறை,
நேர்மைக்கொரு கல்லறை
அன்புக்கொரு கல்லறை
அமைதிக்கொரு கல்லறை

சமத்துவத்திற்கொரு கல்லறை
சகோதரத்துவத்திற்கொரு கல்லறை
சுதந்திரத்திற்கொரு கல்லறை

இந்தக் கல்லறைகளுக்கெல்லாம்

பொய்யும், புரட்டும், வஞ்சகமும், சூழ்ச்சியும், அநீதியும், அக்கிரமும் காவல் நின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் யாரும் யாரையும் சந்திக்க விரும்பவில்லை. எங்கு பார்த்தாலும் சுயநலம் தன்னால் படைக்கப்பட்ட மனுஷர்கள் துடிதுடித்து அனாதைகள் போல சாவதை தேவன் விரும்பவில்லை.

ஏனெனில் வேதம் சொல்லுகிறதன்படி நமது தாயைவிட நம்மை அதிகம் அன்பு செய்பவராயிற்றே நமது தேவன், அப்பேற்பட்ட தேவன் நம் வாழ்க்கையின் தேவையை உணர்ந்தார்.

முள் மலராக வேண்டும்
தேள் தேனாக வேண்டும்.
மண் பொன்னாக வேண்டும்
நோயாளிக்கு உடல்நலம் வேண்டும்
பாவிகளுக்கு பாவ மன்னிப்பு வேண்டும்
இறந்தவர்களுக்கு உயிர்ப்பு வேண்டும்
அறிவுக்குத் தெளிவு வேண்டும்
உள்ளத்திற்கு உறுதி வேண்டும்
வாழ்க்கைக்கு வழி வேண்டும்

என்று ஏங்கி நின்ற ஜனங்களை தேவன் உற்று நோக்கினார். என் உயிரே போனாலும் சரி என் மக்களைக் காப்பாற்றுவேன் என்ற முடிவை எடுத்தார் தேவன். அந்த முடிவின் செயற்பாடுதான் கிறிஸ்மஸ்.

இயேசு யார் யாரைச் சந்தித்தாரோ அவர்களின் வாழ்வில்
உடல் நலம் பொங்கியது
உள்ள அமைதி பொங்கியது
உயிர்ப்பு பொங்கியது
உன்னத வாழ்வு பொங்கியது

மத். 8:ம் அதிகாரத்தில் இயேசு மூவரை சந்தித்தார்.

- முதலில் பேதுருவின் மாமியாரைச் சந்தித்தார் அவருக்கு உடல்நலம் கிடைத்தது.
- பின்னர் பேய்பிடித்த இருவரைச் சந்தித்தார் அவர்களுக்கு விடுதலை கிடைத்தது.

யோவான் எழுதிய புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தால் தேவன் யாரை எல்லாம் சந்தித்தாரோ அவர்களது வாழ்க்கையில் என்னவெல்லாம் அற்புதங்கள் நடந்தது தெரியுமா?

நன்றாக கவனியுங்கள் ப்ரியமானவர்களே!

இயேசு அவர்,

- பாவத்தில் பிடிபட்ட பெண்ணைச் சந்தித்தார் அவளுக்கு மன்னிப்பு கிடைத்தது.
- 11ம் அதிகாரத்தில் கல்லறையைச் சந்தித்தார் உள்ளே இருந்த இலாசருக்கு உயிர் கிடைத்தது.
- சிலுவையிலே தன்னை அறைந்தவர்களைச் சந்தித்தார் அவர்களுக்கு அன்னை மரியாள் உருவில் பாதுகாப்பு கிடைத்தது.
- இறுதியாக உயிர்த்த பின் சீடர்களைச் சந்தித்தார் அவர்களுக்கு சமாதானம் கிடைத்தது.

ஆமாம் ப்ரியமானவர்களே!
இயேசு யார் யாரைச் சந்தித்தாரோ அவர்களின் வாழ்வெல்லாம்
ரோஜாப் பூக்களாக
மல்லிகைப் பூக்களாக
தாமரைப் பூக்களாக
செவ்வந்திப் பூக்களாக
செண்பகப் பூக்களாக
மிளிரும் பூக்களாக
வளரும் பூக்களாக
பூத்துச் சிரித்தன.

இப்படி நம்மை வாழ வைக்கும் இயேசுவைச் சந்தித்து புது வாழ்வும் புத்துயிரும் பெற விசுவாசத்தாலும் நம்பிக்கையாலும் நம்மையே நாம் அலங்கரித்துக்கொள்ளும் முயற்சியில் இந்நாட்களில் ஈடுபடுவோம். அப்போதுதான் நம்மை சந்திக்க வரும் தேவன் ஒவ்வொரு உள்ளங்களையும்.

வளர்பிறை போல் வளர வைப்பார்
வாழை போல் தளைக்க வைப்பார்
கரும்பு போல் இனிக்க வைப்பார்
சந்தனம் போல் மணம் கமழ வைப்பார்
நாம் என்றும் மகிழ்ந்திருப்போம்

ஆகவே நம்மை சந்திக்க வரும் தேவனுக்காக நாம் செய்ய வேண்டியது என்ன? நமது உள்ளத்தையும் இல்லத்தையும் இயேசு தங்கக்கூடிய இனிய இடமாக மாற்ற வேண்டும் அதற்கு இந்த நாட்களிலே நம்மைத் தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும்.

எனவே இன்றைய நாளில் இதுவே நமது ஜெபமாக இருக்கட்டும்.

இயேசுவே!

என் வாய் உம்மைப் போற்ற மறந்தது போதும்
என் நா உம்மைப் புகழ மறந்தது போதும்
என் கண்கள் உம்மைத் தேடத் தவறியது போதும்
என் சுவாசம் உம்மை நேசிக்க மறந்தது போதும்
என் செவிகள் உம் வார்த்தையைக் கேட்க மறந்தது போதும்
போதும் நான் உம்மை விட்டு ஓடியது போதும்
ஓடி ஓடி களைத்துப் போனேன்!
என்னிடம் மிஞ்சியிருப்பதெல்லாம்
சோதனை வேதனை தயக்கம் மயக்கம் குழப்பம் பயம் பஞ்சம் பசி
போதும் நான் உம்மை விட்டு ஓடியது போதும்
இன்று உமது பிரசன்னத்தால் என்னைத் தொட்டுக் சுகமாக்கி உமக்கு ஏற்ற
இல்லிடமாக என்னை மாற்றியருளும்.

**ஆமென்.**



**25.12.2008**








இயற்கை பொங்கினால் எழில் என்கிறோம்
இல்லத்தில் பானை பொங்கினால் வளமை என்கிறோம்
மண்ணில் நிலம் பொங்கினால் பசுமை என்கிறோம்
விண்ணில் நிலவு பொங்கினால் குளுமை என்கிறோம்
ஆசை பொங்கினால் ஆபத்தென்கிறோம்
அன்பு பொங்கினால் ஆண்டவன் என்கிறோம்.

பொங்கிய ஆண்டவனின் அன்பு மட்டும் குடிலிலே வந்து தங்கிய நாளைத்தான் கிறிஸ்மஸ் திருநாளாக கொண்டாடுகிறோம்.

கிறிஸ்மஸ் என்றால் குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை அனைவர்க்குமே கொண்டாட்டம் தான். கிறிஸ்து பிறந்த நாள் கொண்டாட்டத்தின் நாள்தானே.

கிறிஸ்து பிறந்த நாளில் நாம் மகிழ்ந்திருக்கவும் நம்முடைய சொந்தங்களை மகிழ்ச்சிப்படுத்தவும் பரிசுகளைப் பரிமாறுகின்றோம். வழமையாக பிறந்தநாளைக் கொண்டாடும் பிள்ளைக்குத்தான் பரிசுகள் வழங்கப்படும் ஆனால் இங்கு இன்றைய நாள் பிறந்த தினத்தைக் கொண்டாடும் இயேசுவக்கு நாம் என்ன பரிசு கொடுக்கிறோம்?

நமக்குள்ளே பரிசுப் பரிமாற்றம் நடக்கிறது பரிசு கொடுக்கப்பட வேண்டிய இயேசுவுக்கு எங்கே பரிசு? யார் யாருக்கு என்னென்ன பரிசுகள் கொடுக்கனும்னு பெரிய list போட்டுள்ளோம் அதில் இன்றைய பிறந்ததின குழந்தை இயேசுவுக்கு என்ன கொடுக்கனும் அப்படீன்னு நம்முடைய list ல் எழுதி வைத்துள்ளோமா?

இப்போ மனதில் ஒரு கேள்வி இயேசுவுக்கு அப்படி என்ன பரிசு தருவது?

ஒவ்வொரு புதிய குழந்தையும் உலகிற்கு தேவனின் பரிசு

பிறக்கும் குழந்தைக்கு தாயின் முதல் பரிசு – முத்தம்

இப்படியாக பிறந்திருக்கும் பாலகனுக்கு பரிசாக ஒரு முத்தம் போதும்.

ஒரு குழந்தை பிறந்ததும் முதலாவதாக அதற்கு இந்த உலகில் கிடைக்கும் பரிசு முத்தம்.

பெத்லகேமில் பிறந்த இயேசு எனும் குழந்தைக்கும் முத்தங்கள் கொடுக்கப்பட்டன. 33½ வருஷகாலத்திற்குள் இயேசுவிற்கு மூன்று முத்தங்கள் கிடைத்தன.

முதல் முத்தம் மாதா கொடுத்த முத்தம்

இரண்டாவது முத்தம் மகதலா மரியா கொடுத்த முத்தம்

மூன்றாவது முத்தம் யூதாஸ் கொடுத்த முத்தம்

முதல் முத்தம் அது

அன்னை மரியாள் கொடுத்த முத்தம்

கள்ளம் கபடமற்ற முத்தம்

அருள் நிறைந்தவள் அளித்த முத்தம்

ஆசீர்வதிக்கப்பட்டவள் கொடுத்த முத்தம்

ஆண்டவனின் தாய் இட்ட முத்தம்

அந்த முத்தத்தை நாம் விரும்பினாலும் கொடுக்க முடியாது காரணம் நாம் அத்தனை பேரும் குற்றவாளிகள்.

மூன்றாவது முத்தம்: அது யூதாஸ் கொடுத்த முத்தம்! இப்படிப்பட்ட முத்தத்தை நம்மில் யாரும் கொடுக்க விரும்புவதில்லை! கொடுக்கவும் கூடாது.

இயேசு யூதாஸை மூன்று முறை மனம் மாற அழைத்தார்!

- முதல் முறை அவனுடைய பாதங்களைக் கழுவி! யூதாஸ் நான் அடிமையாய் இருந்து உனக்குப் பணிவிடை செய்யத் தயாராக இருக்கிறேன். மனம் மாறு என்றார். அவன் மனம் மாற மறுத்து விட்டான்!
- இரண்டாவது முறை, அப்பத்தை இரசத்தில் தொட்டுக் கொடுத்து: என்னோடு அமர்ந்து

சாப்பிட வா என்றார். அவன் அப்பத்துண்டை எடுத்து கொண்டு பந்தியில் அமராமல் அவரைக் காட்டிக் கொடுக்க, காசு வாங்க வெளியில் சென்றான்!

மூன்றாவது முறை இயேசுவைக் காட்டிக் கொடுக்க அவரை யூதாஸ் முத்தமிட்ட போது இயேசு அவனை: தோழா என அழைத்தார். அப்போது கூட அவன் மனம்மாற மறுத்து விட்டான்.

ஆம் மூன்ற முறை இயேசு முயன்றும் கூட மனம் திரும்ப விரும்பாத அந்தப் பாவி, இயேசுவுக்குப் பாவ முத்தத்தைக் கொடுத்தான்! இப்படிப்பட் முத்தத்தை நம்மில் யாரும் இயேசுவிற்குக் கொடுக்க விரும்புவதில்லை.

இயேசு பெற்ற இன்னொரு முத்தம் மகதலா மரியா கொடுத்த முத்தம். அவள் அந்த ஊரில் பெரிய பாவி! அவளிடமிருந்து இயேசு 7 பேய்களை ஓட்டியதாக நற்செய்தி கூறுகிறது.

ஜனனம் தகப்பனின் படைப்பு  
மரணம் கடவுளின் அழைப்பு  
வாழ்க்கை என்பது  
இவ்விரண்டுக்கம் இடையே  
அரங்கேறும் நடிப்பு

பாவத்தில் விழுந்து பலவருடங்கள் போலியான வாழ்க்கையை வாழ்ந்தாள். இருந்தாலும் இயேசுவின் போதனை அவளை ஈர்த்தது.

அப்போது மனந்திரும்ப வேண்டும் என்ற எண்ணத்தால் தூண்டப்பட்ட அவள், இயேசு இருந்த வீட்டிற்குள் சென்று பரிமள தைலத்தை இயேசுவின் காலில் ஊற்றி கூந்தலால் துடைத்து அவர் காலை முத்தமிட்டாள்!

(எசா. 9:2)ல் குறித்துச் சொல்லப்பட்ட இயேசு எனும் பேரொளி அவளின் பாவங்களையெல்லாம் அவளுக்குச் சுட்டிக்காட்டியது. அவள் அழுதாள்.

எல்லோரும் முனுமுனுத்தனர்! ஆனால் பாவத்திற்காக மனம் வருந்திய அந்தப் பாவி கொடுத்த முத்தத்தை இயேசு ஏற்றுக் கொண்டு, மற்றவர்களைப் பார்த்து: இவள் என்னை

அதிகம் அன்பு செய்ததால் இவளுக்கு அதிகம் மன்னிக்கப்பட்டது என்றார்.

அவள் கொடுத்த முத்தம் அவளுக்குப் பாவ மன்னிப்பைப் பெற்றுத் தந்தது!

இவள் கொடுத்த முத்தத்தை இன்று நாம் விரும்பினால் நம்மால் இயேசுவுக்குக் கொடுக்க முடியும்! கொடுக்க வேண்டும். இதுவே நாம் இயேசுவுக்குக் கொடுக்க கூடிய பிறந்தநாள் பரிசு.

நாமெல்லாம் பாவிகள் தானே! ஆகவே மகதலே மரியா தந்த முத்தத்தை இன்று இயேசுவுக்கு அளிப்போம்! குழந்தை இயேசுவைப் பார்த்து:

இயேசுவே உமது அன்பு அன்னை அளித்த அந்த மாசற்ற முத்தத்தை எங்களால் உமக்கு அளிக்க முடியாது! ஏனென்றால் நாங்களெல்லாம் மாசுள்ளவர்கள்!

யூதாஸ் அளித்த முத்தத்தை நாங்கள் அளிக்க விரும்பவில்லை. காரணம், உம்மைக் காட்டிக்கொடுத்து மீண்டும் சிலுவையில் அறைய விரும்பவில்லை.

ஆகவே நாங்கள் மகதலா மரியா அளித்த மனந்திரும்புதல் முத்தத்தை உமக்கு பிறந்ததின பரிசாக அளிக்கிறோம். ஏற்றுக்கொண்டு எங்களுக்குப் பாவ மன்னிப்பளித்து எங்களைப் புனிதர்களாக்கியருளும்.

ஆமாம் ப்ரியமானவர்களே ! இயேசுவுக்கு இன்றைய நாளிலே நாம் கொடுக்கக் கூடிய பரிசு மகதலேன் மரியா கொடுத்த அதே மனமாற்றத்தின் முத்தம்தான். உதய சூரியனாக இருக்கும் நம் தேவன் நம் இதயங்களில் எழுந்தருள வேண்டும் அப்போதுதான் உள்ளங்களில் ஒளிபடரும்.

தேவன் இல்லாவிட்டால்

ஒளியிழந்து போகும் நம் உள்ளங்கள்
வலுவிழந்து போகும் எண்ணங்கள்
கலையிழந்து போகும் நம் கனவுகள்
அருளிழந்து போகும் நம் வாழ்க்கைகள்

மொத்தத்தில்
உன்
உதயம் காண
தாமதமானால்
என் இதயம் கூட
இயங்க மறுக்கின்றது
இறைவா

எனும் ஏக்கம் நம் எண்ணத்தில் எப்போதுமே ஒலித்துக் கொண்டுதான் இருக்கும்.

என் இயேசு அவர்
மானுடத்தின் விடி வெள்ளி
அன்று
அவர் பெயர்
எழுதக் கூட
அனுமதிக்காமல்
மொழி
முடக்கப்பட்டது.

இன்றோ
சூரியன் கூட
அவன் பெயரை
உச்சரிக்காமல்
உதிக்க முடியவில்லை.

அவர் இருந்த போதோ
தூஷிக்கப்பட்டவர்
இன்று
அவர்
புதைகுழியின்
புல்லும் கூட
பூஜிக்கப்படுகிறது.

அவர் கண்களில்
உலகின் இருட்டை எல்லாம்
விரட்டியடிக்கும்
வெளிச்சம்

அவர் தான்
மனித குலத்தின்
இறந்த காலத்தை எல்லாம்
ஜெயித்து முடிந்த சிந்தனையாளன்

அவர் தடுத்திராவிட்டால்
சரித்திரம்
தரித்திரத்தின் விளிம்புக்குள்
தள்ளப்பட்டிருக்கும்!

ஓ!
மனிதா உனக்குள்
வர்க்கச் சிந்தனையை நிறுத்திவிடு
சொர்க்கச் சிந்தனையை வளர்த்து விடு
வியர்வைக்கு விலை
இவ்லோகத்தில் இல்லை
பரலோகத்தில் உண்டு
என்று எடுத்துச் சொன்னவர்
என் தேவன்.

அவர் குரல்
அகிலத்தின் சுவர்களை
அசைத்தது.
பழைய விருட்சங்களின்
விஷ வேர்களைச்
சென்று விசாரித்தது.

இப்படியாக உலகில் நாம் வாழ இந்த உலகையே சலவை செய்தவர் என் இயேசு. அந்த விண்ணக மன்னருக்கு அவர் பூமியை விஜயம் செய்த நாளை நினைவுகூரும் நாம் அனைவரும் மகதலேன் மரியா தந்த அதே முத்தத்தைப் பரிசாகக் கொடுத்து பிறந்திருக்கும் பாலனை மகிழ்ச்சிப்படுத்துவோம்.

**ஆமென்.**